# நோன்புப் பெருநாள் முதல் நாளில்
# சட்டவிரோத அங்காடி வணிகர்கள் மீது நடவடிக்கை

கோலாலம்பூர், ஏப். 2- நோன்புப் பெருநாள் முதல் நாளில் லைசென்ஸ் பெறாத அந்நியத் தொழிலாளர்களால் நடத்தப்பட்ட 9 அங்காடி கடைகளை மாநகர மன்ற உறுப்பினர்கள் உடைத்தனர்.

ஜாலான் சீலாங், ஜாலான் புக்கிட் பிந்தாங், ஜாலான் ஹூ



தியோக் கி ஆகிய வட்டாரங்களில் அனுமதி இல்லாமல் அங்காடி கடைகளை வைத்து வியாபாரம் செய்தவர்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

அதே போல கடந்த மார்ச் 28 ஆம் தேதி ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் இதே போன்று உரிமம் பெறாதவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஒரு பலூன் விற்பனையாளர் காயமடைந்தார்.

முகமட் சைமுடி அஸ்லான் (வயது 28) என்ற அந்த நபர் செர்டாங் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அதே வேளையில் அவரிடம் மல்லுகட்டிய 3 மாநகர அதிகாரிகள் சில தினங்கள் வரை விடுமுறையில் செல்ல ஆணையிடப்பட்டுள்ளனர்.